**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

தம் சிலுவையைச் சுமக்காமல் என்பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது.

**(லூக்கா 14:27)**

இதற்கெல்லாம் மாறாக இயேசு சொல்வதைப் பாருங்கள். “ என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள் ஆகியோரையும், ஏன் தம் உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால், அவர் என் சீடராயிருக்க முடியாது” என்று கூறுகிறார். இதுவொரு முற்றிலும் மாறுபட்ட மொழியை இயேசு பயன்படுத்துகிறார். முற்றிலும் எதிரான ஒரு வழியாகத் தான் தெரிகிறது. **இதில் எந்தவொரு குறுக்குவழியும் இல்லை.**

எந்தவொரு செயலையும் செய்வதற்குமுன் அதற்குண்டான செலவுகளைக் கணக்கிடும் நடைமுறை எடுத்துக்காட்டுகளை இயேசு நமக்குத் தருகிறார். ஒரு கோபுரத்தைக் கட்டுவதற்கோ அல்லது ஒரு போர் தொடுக்கச் செல்வதற்கு முன்னதாகவோ செய்யப்படவிருக்கும் முன் தயாரிப்பைப் பற்றியும் கூறுகிறார். அதேபோல சீடனாக மாறுவதற்கு முன் நாம் திட்டமிட வேண்டிய, கொடுக்கவேண்டிய ஒரு விலை உண்டு. அதுதான் நம்முடைய சிலுவையைச் சுமந்து செல்வது மேலும் பலவேளைகளில் அது மிகவும் பாரமானதாகக் கூட இருக்கலாம். நாம் திரும்பும் இடமெல்லாம், “மலிவு விற்பனை” என்று கூவிக்கொண்டிருக்கும், ஆபத்துகளும், சோதனைகளும் நம்மை திசைதிருப்பிக்கொண்டே இருக்கும். இதனால் தான், நாம் திட்டமிட்டு, **தேர்ந்து தெளிந்து, உத்திகளை வகுத்து, முடிவெடுக்க வேண்டும்**. நமக்கு நெருக்கமான மற்றும் அன்பானவர்களிடமிருந்து இதுபோன்ற குரல்கள் வந்தாலும், நாம் தான் சரியான பாதைகளையும் முடிவுகளையும் கவனத்தோடு தேர்ந்தெடுக்க வேண்டும். இது கடினமான முடிவாக இருக்கலாம். ஆனால் இதுதான் சீடத்துவத்தின் விலை.

நம்மைச் சுற்றியுள்ள உலகத்தின் கதவுகளை மூடுவதல்ல; இயேசுவுடன் நெருங்கிச் செல்லும் வழிகள் மற்றும் திசைதிருப்புபவை எவையென்று நாம் தான் தேர்ந்தெடுக்க வேண்டும். இயேசுவின் தெளிவான விளக்கம்: தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்க முடியாது” நம் ஒவ்வொருவருக்காகவும், இயேசு அனைத்தையும் துறந்தார். **சுயநலத்திற்கு எதிராக, தன்னலமற்றத் தன்மையைத் தேர்ந்தெடுத்தார். ஞானத்திற்கு எதிராக, மடமையைத் தேர்ந்தெடுத்தார். வெறுப்புக்கு எதிராக, அன்பைத் தேர்ந்தெடுத்தார்.** சீடத்துவத்திற்கு எதிராகக் கொடுக்கப்படும் சிலுவையின் விலை இதுதான். நாமும் அறிவாற்றலோடு தேர்ந்தெடுக்க வேண்டும். நாம் சுமக்கும் சிலுவையின் எடை அதிகமாக இருக்கலாம். ஆனால் நமக்கு எவ்வாறு உதவுவது என்று அவருக்குத் தெரியும். உலகம் சொல்வதற்கு எதிராகச் செல்லவும், சீடராக மாறவும் என்ன விலை கொடுக்கவேண்டுமென்று புரிந்துகொள்ளவும், நம் வாழ்வில் பிரசன்னமாய் இருக்கும் கடவுளின் ஆவியானவர் நமக்கு உதவிசெய்வார் என்று நம்புங்கள். உறுதியோடு நம்புங்கள். ✣

**இன்றைய வாசகங்கள்:**

ஞானநூல்: 9: 13-18;

திபா: 90: 3-6, 12-14, 17;

பிலமோன்: 9-10,12-17;

லூக்கா: 14: 25-33.

INTERNAL CIRCULATION ONLY
BUL 36/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

4 செப்டம்பர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 23 ஆம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்:

**மலேசிய தினம் (செப் 16)**

# சீடத்துவத்தின் அதிக விலை



நம் வாழ்க்கைப் பயணத்தில் பயணிக்கும்போது, பல்வேறு சலுகைகளை நாம் எதிர்கொள்கிறோம். பலர் சந்தையிலிருந்து எதையாவது வாங்கும்போது இலவசமாக பல சலுகைகளைப் பெறுகிறார்கள். அனைத்து இடங்களிலும் ஒரு குறுக்கு வழியில் சென்று மலிவான விற்பனை சலுகைகளைத் தேர்வு செய்வார்கள். சில ஆசிரியர்கள், மற்றும் நவீனகால சட்ட குருக்களும் கூட குருக்கு வழியில் சென்றால் நிலைவாழ்வை அடையமுடியும் என்று கூறுவார்கள்.